ஸ்ரீ ஹரி:

# பூஜ்யஸ்ரீ முரளீதர ஸ்வாமிகளின்

# மதுரமுரளி

வேணு : 8 | ஜனவரி 2003 | கானம் : 6

## விஷய ஸூசிகை


| | | பக்கம் |
|---|---|---|
| 1. | ஸ்ரீ ஆபதுத்தாரண ஸ்தோத்ரம் | 2 |
| 2. | மதுரமான மஹனீயர் - 86 | 3 |
| 3. | பக்தர்களின் கேள்விகளுக்கு ஸ்ரீ ஸ்வாமிகளின் பதில்கள் | 6 |
| 4. | வேத கதைகள் - 67 | 9 |
| 5. | எந்தரோ மஹானுபாவுலு - 57 | 11 |
| 6. | ஸனாதனப் புதிர் - பகுதி - 21 | 15 |
| 7. | கடவுளுக்கு ஒரு கடிதம் | 18 |
| 8. | பாலகர்களுக்கு ஒரு கதை - 61 | 20 |
| 9. | மாலே மணிவண்ணா - 4 | 22 |
| 10. | ப்ருந்தாவனமும், நந்தகுமாரனும் - 12 | 25 |
| 11. | ஸ்ரீ ஸ்வாமிகளின் ஸம்பாஷணைகளிலிருந்து - 88 | 28 |


*மாயனை மன்னு வடமதுரை மைந்தனை*
*தூய பெருநீர் யமுனைத் துறைவனை*
*ஆயர் குலத்தினில் தோன்றும் அணிவிளக்கை*
*தாயை குடல் விளக்கஞ் செய்த தாமோதரனை*
*தூயோமாய் வந்து நாம் தூமலர் தூவித்தொழுது*
*வாயினாற்பாடி, மனத்தினாற் சிந்திக்க*
*போய பிழையும் புகுதருவான் நின்றனவும்*
*தீயினில் தூசாகும் செப்பேலோரெம்பாவாய்*

- ஆண்டாள் திருப்பாவை

ஸ்ரீ ஹரி:

# ஸ்ரீ ஆபதுத்தாரண ஸ்தோத்ரம்

ஆபதாம் அபஹர்த்தாரம் தாதாரம் ஸர்வஸம்பதாம் ।
லோகாபி ராமம் ஸ்ரீராமம் பூயோ பூயோ நமாம்யஹம் ॥ 1

ஆர்த்தாநாமார்த்திஹந்தாரம் பீதாநாம் பீதிநாசநம் ।
த்விஷதாம் காலதண்டம்தம் ராமசந்த்ரம் நமாம்யஹம் ॥ 2

நம: கோதண்டஹஸ்தாய ஸந்தீக்ருத ஶராய ச ।
கண்டிதாகில தைத்யாய ராமாயாபந்நிவாரிணே ॥ 3

ராமாய ராமபத்ராய ராமசந்த்ராய வேதஸே ।
ரகுநாதாய நாதாய ஸீதாயா: பதயே நம: ॥ 4

அக்ரத: ப்ருஷ்டதச்சைவ பார்ச்வதஶ்ச மஹாபலௌ ।
ஆகர்ண பூர்ண தன்வாநௌ ரக்ஷேதாம் ராம லக்ஷ்மணௌ ॥ 5

ஸன்னத்த: கவசீ கட்கீ சாபபாணதரோ யுவா ।
கச்சந் மமாக்ரதோ நித்யம் ராம: பாது ஸலக்ஷ்மண: ॥ 6

அச்யுத அநந்த கோவிந்த நாமோச்சாரண பேஷஜாத் ।
நஸ்யந்தி ஸகலா ரோகா: ஸத்யம் ஸத்யம் வதாம்யஹம் ॥ 7

ஸத்யம் ஸத்யம் புநஸ்ஸத்யமுத்ருத்ய புஜமுச்யதே ।
வேதாஸ் ஶாஸ்த்ரம் பரம் நாஸ்தி நதைவம் கேசவாத் பரம் ॥ 8

ஶரீரே ஜர்ஜரீபூதே வ்யாதிக்ரஸ்தே களேபரே ।
ஔஷதம் ஜாஹ்நவீதோயம் வைத்யோ நாராயணோ ஹரி: ॥ 9


ஆலோட்ய ஸர்வஶாஸ்த்ராணி விசார்ய ச புந: புந: ।
இதமேகம் ஸுநிஷ்பந்நம் த்யேயோ நாரயணோ ஹரி: ॥ 10

காயேந வாசா மநஸேந்த்ரியைர்வா
புத்த்யாத்மநா வா ப்ரக்ருதே: ஸ்வபாவாத் ।
கரோமி யத்யத் ஸகலம் பரஸ்மை
நாராயணாயேதி ஸமர்ப்பயாமி ॥ 11

யதக்ஷர பதப்ரஷ்டம் மாத்ராஹீநந்து யத்பவேத் ।
தத் ஸர்வம் க்ஷம்யதாம் தேவ நாராயண நமோஸ்துதே ॥

விஸர்க பிந்து மாத்ராணி பத பாதாக்ஷராணி ச ।
ந்யூநாநி ச அதிரிக்தாநி க்ஷமஸ்வ புருஷோத்தம ॥

- ஸ்தோத்ர ரத்ன மாலா



இந்த வருடம் வைகுண்ட ஏகாதசி, ஸ்ரீரங்கத்தை ஒட்டினாற்போல் 15-12-2002 அன்று அனுஷ்டிக்கப்பட்டது. மதுரபுரி ஆசிரமத்தில், காலையில் ஸ்ரீ கல்யாணஸ்ரீநிவாஸபெருமாளுக்கு திருமஞ்சனம் செய்யப்பட்டது. ''பப்பா ராமதாஸ் ஸமிதி''யைச் சேர்ந்த பக்தர்களால் ஸ்ரீ கல்யாணஸ்ரீநிவாஸபெருமாளின் திருக்கோயிலில் காலை முதல் மாலை வரை அகண்டமாக, ''ஓம் ஸ்ரீராம் ஜயராம் ஜயஜயராம்'' நாம ஜபம் செய்யப்பட்டது. பல பக்தர்கள் அந்த நாம ஜபத்தில் கலந்துகொண்டார்கள்.

காலை 9 மணி அளவில் ஸ்ரீ ப்ரேமிகவரதன் கருட வாஹனத்தில் புறப்பாடு கண்டருளினார். காலை பத்துமணி அளவில் ப்ரேமிகவரதனுக்கு மிகவும் விசேஷமாக திருமஞ்சனம் செய்யப்பட்டு அர்ச்சனைகள் எல்லாம் நடைபெற்றது. பூஜை முடிந்து ஸ்ரீ ஸ்வாமிகள் தீர்த்த ப்ரசாதம் கொடுப்பதற்கே மதியம் 2 மணி ஆகிவிட்டது.

மாலையில் பாடசாலை குழந்தைகளின் நித்ய ஸஹஸ்ரநாம, ஸ்தோத்திர பாராயணங்கள் எல்லாம் முடிந்தபின் ஸம்ப்ரதாய திவ்ய நாமஸங்கீர்த்தனம் நடைபெற்றது. திவ்யநாம ஸங்கீர்த்தனம் முடிந்தபிறகு ஸ்ரீ ஸ்வாமிகள் உபன்யாசம் நிகழ்த்தினார்கள்.

பாகவத மஹாத்மியத்தைப் பற்றி ஸ்ரீ ஸ்வாமிகள் குறிப்பிடும் பொழுது ஆத்மதேவனுடைய சரித்திரத்தையும் எடுத்துக் கூறினார்கள். ''குழந்தை இல்லாத ஆத்மதேவன் தனக்கு ஒரு குழந்தை பிறக்க வேண்டும் என்பதற்காக பலவிதத்திலும் பிராயச்சித்தங்கள், தான தர்மங்கள் செய்து பார்க்கின்றான். அப்பொழுதும் அவனுக்கு குழந்தை பிறக்கவில்லை. பிறகு தற்செயலாக ஒரு மஹாத்மாவினுடைய தரிசனம் அவனுக்கு கிடைக்கின்றது. அவரோ அவனுடைய தலை எழுத்தைப் படித்துப் பார்த்துவிட்டு, ''இதற்கு முன்பாக ஏழு பிறவிகளில் உனக்கு குழந்தை இல்லை. அடுத்த ஏழு பிறவிகளிலும்

குழந்தை பிறக்கப் போவதில்லை'' என்று கூறினார். மேலும், ஸம்ஸாரத்தில் உள்ள துக்கங்களையும், ஸந்யாஸத்தினுடைய பெருமைகளையும் எடுத்துக்கூறி, அவனை ஸந்யாஸம் வாங்கிக்கொள்ளச் சொன்னார். அவன் கேட்கவில்லை. பிடிவாதமாக தனக்கு புத்ரன் வேண்டும் என்று அழுதான். அந்த மஹாத்மாவும் அவனுக்கு குழந்தை பிறக்கட்டும் என்று ஆசீர்வதித்து, ஒரு பழத்தை கொடுத்துச் சென்று விடுகின்றார். அவனுடைய மனைவியோ அதை பசு மாட்டுக்கு கொடுத்துவிட, பசு மாட்டிற்கு ஸத்தான கோகர்ணன் என்ற குழந்தை பிறந்துவிடுகின்றது.

ஆத்மதேவனுடைய மனைவியோ தனது ஸகோதரியினுடைய குழந்தையான துந்துகாரியை எடுத்து, தன் குழந்தை என்று பொய் சொல்லி வளர்க்கின்றாள். அவனோ மிகவும் போக்கிரியாக இருந்தான். அவனுடைய கெட்ட நடவடிக்கைகளாலும், அவனுடைய அடாவடித்தனத்தாலும் வெறுப்புற்று, கோகர்ணனுடைய உபதேசங்களை ஏற்று கடைசியாக ஆத்மதேவன் ஸந்யாஸம் வாங்கிக்கொண்டான். இதிலிருந்து என்ன தெரியவருகின்றது என்றால்– அவனை முதலில் அந்த மஹாத்மா ஸந்யாஸம் வாங்கிக்கொள்ளச் சொன்னார். அவன் மறுத்தான். ஆனால், பிற்காலத்தில் அவனாகவே ஸந்யாஸம் வாங்கிக் கொள்ளக்கூடிய ஒரு நிலை வந்துவிட்டது. மஹான்களுடைய ஸங்கல்பம் எப்படியும் நடந்தே தீரும் என்பதற்கு இது ஒரு தக்க சான்று'' என்று ஸ்ரீ ஸ்வாமிகள் எடுத்துரைத்தார்.

மேலும், ''பகவந்நாம ஸித்தாந்தம் செய்த பகவந்நாம போதேந்திர ஸ்வாமிகள், நாமஸங்கீர்த்தனம் செய்யும்பொழுது பத்துவிதமான குற்றங்களை தவிர்த்து நாமகீர்த்தனம் செய்யவேண்டும் என்றும், அப்படி செய்யும் நாமகீர்த்தனம்தான் பலன் தரும் என்றும் ஸித்தாந்தம் செய்துள்ளார். ஒருவன் அறியாமல் மேற்படி பத்து குற்றங்களில் ஏதாவது செய்திருப்பானானால், அவனுக்கு என்ன பிராயச்சித்தம் விதிக்கப்பட்டிருக்கின்றது என்று அவர் ஸித்தாந்தம் செய்யும்பொழுது, புண்ய காலங்களில் செய்யும் நாமகீர்த்தனம் அவன் பகவானுடைய நாமத்திற்கு செய்த குற்றங்களை போக்கிவிடும் என்று ஸித்தாந்தம் செய்துள்ளார். இன்று வைகுண்ட ஏகாதசி. மஹத்தான ஒரு புண்ய தினம். ஆகவே இன்று அனைவரும்

கீர்த்தனம் செய்வோம்'' என்றார்கள். அதன் பிறகு நம்முடைய ஆஸ்ரமத்தை சுற்றியுள்ள அநேக கிராமங்களைச் சேர்ந்தவர்களால் இரவு முழுவதும் அகண்டமாக மஹாமந்திர கீர்த்தனம் நடைபெற்றது.

ஸமீபத்தில், ஸ்ரீ ஸ்வாமிகள், அவர் பிறந்த ஊரான கடலூரில் ஒரு இசை கேசட் வெளியீட்டு நிகழ்ச்சியில் கலந்துகொண்டார்கள். அங்கு எல்லோரும் பேசும்பொழுது, நம் ஸ்வாமிகள் இந்த ஊரில் பிறந்ததால் இந்த ஊருக்கு பெருமை என்றெல்லாம் பேசினார்கள். ஆனால், நம் ஸ்வாமிகள் உரை நிகழ்த்தும்பொழுது, ''கடலூர் நகரம் மிகவும் சிறப்பு வாய்ந்தது. நகரத்தின் ஒருபுறம் ஓடும் பினாகினி என்ற இந்த பெண்ணையாற்றைப் பற்றி புராணங்களிலேயே உயர்வாகப் பேசப்பட்டிருக்கின்றது. மறுபுறம் கருடநதி. அப்பரால் கொண்டாடப்பட்ட பாடலீஸ்வரர் திருக்கோயில் அமைந்த திருத்தலம். முக்தி தரக்கூடிய ஏழு நகரங்களில் முக்கியமானதாகவும், தமிழ்நாட்டில் பெருமை வாய்ந்ததாகவும் உள்ள காஞ்சிபுரம் அருகே உள்ள தூப்புல் என்ற கிராமத்தில் வேதாந்ததேசிகன் பிறந்து, தவம் செய்வதற்கு ஹேமாம்புஜவல்லி ஸமேத தேவநாதன் கோயில்கொண்டுள்ள இந்த திருவஹிந்திரபுரத்திற்குத்தான் வந்தார். இத்தனை பெருமைகள் வாய்ந்த ஊரில் பிறந்தது எனக்குதான் பெருமை'' என்று ஆரம்பித்து உரை நிகழ்த்தினார்கள். திரளான பக்தர்கள் இந்த விழாவில் கலந்துகொண்டார்கள்.

(தொடரும்)

- ஜயந்தி ஜானகிராமன்

---

*மனிதன், தன்னுடைய உடலில் எந்த பாகத்தை தூய்மையாக வைத்துக் கொள்ளாவிட்டாலும் கூட, தன்னுடைய கைகளையாவது தூய்மையாக வைத்துக்கொள்ள வேண்டும். ஏனென்றால், அந்த கைகளினால்தானே இறைவனை தொட்டு, திருமஞ்சனம், பூஜை எல்லாம் செய்கின்றான்.*

- ஸ்ரீ ஸ்வாமிகள்

# பக்தர்களின் கேள்விகளுக்கு ஸ்ரீ ஸ்வாமிகளின் பதில்கள்

கேள்வி : நாங்கள் எங்களுடைய குடும்பத்தில் உள்ள அனைவருடைய ஜாதகங்களையும் ஒரு நல்ல ஜோதிடரிடம் காண்பித்தோம். அவர், எங்கள் வீட்டில் உள்ள அனைவருடைய ஜாதகங்களையும் நன்றாகப் பார்த்துவிட்டு எங்கள் குடும்பத்தில் துர்மரணம் ஏற்பட்டிருக்கின்றது என்று தீர்மானமாக கூறுகின்றார். ஆனால், எங்களுக்குத் தெரிந்து அப்படி ஒன்றும் நடக்கவில்லை. இப்படி இருக்க, அவர் அப்படி சொல்வதற்கு என்ன காரணமாக இருக்கக்கூடும்?

ஸ்ரீ ஸ்வாமிகள் : துர்மரணம் என்பது இந்த காலகட்டத்தில் நமக்குத் தெரியாமலே பல விதத்திலும் நடக்க வாய்ப்பிருக்கின்றது. கர்ப்பம் உண்டானபின் குழந்தை வேண்டாம் என்று நினைக்கும் பலர், பல நவீன மருத்துவ முறைகளால் அதை கலைத்துவிடுகின்றார்கள். அவை எல்லாம் கூட கொலைதான்; துர்மரணம்தான்; சிசுஹத்திதான் (சிசுகொலைதான்). இப்படி உங்கள் குடும்பத்திலே உங்களுக்குத் தெரியாமல் நடந்திருக்கக்கூடும்; அல்லது உங்களுக்கு தெரிந்து நடந்திருந்தாலும் கூட இவைகளையெல்லாம் நீங்கள் ஒரு கொலையாக நினைத்திருக்காததே காரணமாகும்.

கேள்வி : நீங்கள் சொல்வது போல் இருந்தால் இதற்கெல்லாம் என்ன பரிகாரம்?

ஸ்ரீ ஸ்வாமிகள் : சாதாரணமாக இப்படித் தெரிந்தும் தெரியாமலும் ஏற்படக்கூடிய துர்மரணங்கள் எல்லாவற்றிற்கும் ஒரே பரிகாரம் கயா க்ஷேத்திரத்தில் செய்யக்கூடிய சிரார்த்தம்தான். அங்கு விஷ்ணு பாதத்திலே நாம் போடக்கூடிய பிண்டங்களை விஷ்ணுவே அந்தந்த பித்ருக்களுக்குக் கொடுத்து கரை சேர்க்கின்றார். மேலும், கயையில் நமக்குத் தெரிந்தவர்கள், நண்பர்கள், பாடம் சொல்லிக் கொடுத்த ஆசிரியர்கள், பக்கத்து வீட்டுக்காரர்கள், நம்முடன் பயணம் செய்தவர்கள், ஆதரவற்றவர்கள் என்று யாருக்கு வேண்டுமானாலும்

பிண்டம் போடலாம். ஒருவன் பல குழந்தைகளைப் பெற்று எடுப்பதே இதில் யாராவது ஒருவனாவது கயா க்ஷேத்திரத்திற்குச் சென்று நமக்காகப் பிண்டம் போடுவான் என்பதை உத்தேசித்துதானாம்.

கேள்வி : வேதத்தில் ஜீவன் இறந்தபின் அடையக்கூடிய கதியைப் பற்றி ஏதாவது சொல்லியிருக்கின்றதா?

ஸ்ரீ ஸ்வாமிகள் : உபநிஷத்தில் ஜீவன் அடையக்கூடிய கதிகளைப் பற்றியெல்லாம் சொல்லியிருக்கின்றது. பிரம்மா முதற்கொண்டு ஒரு சிறிய பூச்சி வரை எல்லா ஜீவராசிகளுக்கும் பொதுவாக இரண்டு அவஸ்தைகள் உண்டு. ஒன்று குடிப்பது, மற்றொன்று உண்பது. எவன் தன்னுடைய சரீரம்தான், தான் என்ற எண்ணத்துடன் உயிரை விடுகின்றானோ அவன் மீண்டும் இத்தகைய ஜீவராசிகளில் ஏதாவது ஒன்றாகப் பிறக்கின்றான். பிராணன்தான், தான் என்ற எண்ணத்துடன் எவன் உயிரை விடுகின்றானோ, அவன் பித்ருலோகத்தை அடைகின்றான். மனதுதான், தான் என்ற எண்ணத்துடன் யார் உயிரை விடுகின்றார்களோ அவர்கள் (அதாவது அந்த மனதை அடக்கி தர்ம வழியில் செலுத்தி புண்ணியத்தை சம்பாதித்துக்கொண்டவர்கள்) ஸ்வர்கத்தை அடைகின்றார்கள். அறிவுதான் தான் என்ற எண்ணத்துடன் கூடி உபாசனைகளைச் செய்தவர்கள் உயர்ந்த உலகங்களை அடைகின்றார்கள். இதையும் தாண்டிய ஆத்மாதான் தான் என்ற எண்ணத்துடன் மனோ நாசத்தை அடைந்தவர்கள் ஜீவன்முக்தர்களாகி விடுகின்றார்கள். இவையெல்லாம் உபநிஷத்தில் கூறப்பட்டவையே!

கேள்வி : பக்தர்கள் பிரேமைதான் அடைய வேண்டிய லட்சியம் என்று கூறுகின்றார்களே? அப்படியானால் ஆத்மஸ்வரூபத்தை அடைவது அவர்களுடைய லட்சியம் இல்லையா?

ஸ்ரீ ஸ்வாமிகள் : உபநிஷத்தில் ஆத்மஸ்வரூபத்தைபற்றி சொல்லும் பொழுது ''ப்ரியமேவ சிர:'' என்று வருகிறது. அந்த ப்ரஹ்மஸ்வரூபம் ப்ரேமை மயமாக, கருணை மயமாக இருக்கின்றது என்று உபநிஷத்தே கூறுகின்றது. ஆத்மஸ்வரூபமே ப்ரேமஸ்வரூபம்தான்.

கேள்வி : தனிமையிலே ஒரு இடத்திலே அமர்ந்துகொண்டு ஒருவர் தவம் இயற்றிவருகின்றார். அப்படி ஒருவர் தவம் இயற்றுவதால் உலகத்திற்கு ஏதாவது பயன் உண்டா?

ஸ்ரீ ஸ்வாமிகள் : உலகத்திற்கே ஒரே ஒரு சூரியன்தானே இருக்கின்றது. அந்த ஒரு சூரியனால் உலகம் முழுவதும் க்ஷேமமாக இல்லையா? அதுபோல், எங்கோ ஒருவர், யாருக்கும் தெரியாமல், எந்த காரியமும் செய்யாமல், உலகத்திற்கு எந்த உபதேசமும் செய்யாமல் தவம் செய்து வந்தாலும், அந்த தவசக்தியினால் உலகத்திற்கே நன்மை உண்டு.

## *2003-ஆம் வருடத்திய ஸத்ஸங்க நிகழ்ச்சிகள்*

| தேதி | நிகழ்ச்சி | இடம் |
|---|---|---|
| 01/01 to 10/01 | கீர்த்தனாவளி | ஆஸ்ரமம் |
| | அத்யயன உத்ஸவம் | ப்ரேமிகபவனம் |
| 06/02 to 12/02 | பஜனை ஸப்தாஹம் | ஸ்ரீ கல்யாண ஸ்ரீநிவாஸ பெருமாள் கோயில் |
| 09/03 to 18/03 | பங்குனி உத்திரம் - ரங்க ஸதகம் | ப்ரேமிகபவனம் |
| 11/04 to 20/04 | ஸ்ரீ ராம நவமி - ராகவ ஸதகம் | ப்ரேமிகபவனம் |
| 06/05 to 15/05 | வஸந்தோத்ஸவம் - யுகள ஸதகம் | ஆஸ்ரமம் |
| 19/08 to 28/08 | கோகுலாஷ்டமி - கோவிந்த ஸதகம் | ஆஸ்ரமம் |
| 26/10 to 05/11 | நவராத்ரி - ராதிகா ஸதகம் | ஆஸ்ரமம் |
| 16/12 to 25/12 | கீர்த்தனாவளி | ஆஸ்ரமம் |
| | அத்யயன உத்ஸவம் | ப்ரேமிகபவனம் |
| | சுபம் | |

# வேத கதைகள் - 67

- தர்மஜ்ஞர், வாங்முக ஸார்வபௌம, மேலக்காவேரி
ப்ரஹ்மஸ்ரீ பஞ்சாபகேஶ ஶாஸ்த்ரிகள்

## ஸ்விஷ்டக்ருத் யாகம்

தேவர்கள் யாகம் செய்யும்பொழுது ருத்ரனுக்கு ஹவிர்பாகம் கொடுக்காமல் யாகம் செய்தனர். உடன் கோபம் கொண்ட ருத்ரன் தேவர்கள் செய்யும் யாகத்தை அழித்தார். ருத்ரனுக்கு இருக்கும் பல பெயர்களில் ஆசுகோபர், ஆசுதோஷர் என்று இரு பெயர்கள் உண்டு. ஆசுதோஷர் என்றால் சீக்கிரமாக மகிழ்ச்சி அடைபவர் என்பதனால் வங்காளத்தில் ஆசுதோஷ் என்று பெயர் வைக்கிறார்கள். சடர்ஜி, பானர்ஜி, முகர்ஜி என்று பெயர்கள் உண்டு. ஆசுதோஷ் முகர்ஜி என்று பெயர் வைத்துக்கொள்கிறார்கள்.

ஆசுகோபர் என்றால் சீக்கிரமாகக் கோபம் கொள்பவர் என்று பெயர். தேவர்கள் ருத்ரனை மறந்து யாகம் செய்ததால் ருத்ரனுக்கு சீக்கிரமாகக் கோபம் ஏற்பட்டது. உடன் யாகத்தை அடித்து நொறுக்கினார். யாகம் அழிந்ததால் வருந்திய தேவர்கள் ருத்ரனை சரண் அடைந்தனர்.

ஓ தேவனே! எங்களால் செய்யப்பட்ட யாகத்தை நன்கு செய்யப்பட்டதாக நிறைவு செய்வீராக என்று வேண்டினர். உடன் ருத்ரனும் யாகத்தில் ப்ரதான யாகம் முடிந்தவுடன் மீதமுள்ள ஹவிஸ்ஸுகளால் எனக்கு யாகம் செய்யுங்கள். அப்போதுதான் யாகம் நிறைவு பெற்றதாக ஆகும் என்று வரமளித்தார். தேவர்களும் மகிழ்ந்து ருத்ரனை நன்கு ஆராதித்து ஸ்விஷ்டக்ருத் என்ற யாகத்தைச் செய்தார். யாகம் நன்கு நடைபெற்றதால் இந்த யாகத்திற்கு ஸ்விஷ்டக்ருத் யாகம் என்று பெயரிடப்பட்டது.

ஸ்விஷ்டக்ருத் யாகம் ஆனபிறகு, பசுமாட்டின் காதுபோல் செய்யப்பட்ட ஒரு மரப்பாத்திரத்தில் யவை என்ற தானியத்தின் அளவு ஹவிஸ்ஸை வைத்து ப்ரஹ்மாவிடம் கொடுக்கவேண்டும்.

அதை ப்ரஹ்மா தன் பற்களில் படாமல் வாயில் போட்டுக்கொள்ள வேண்டும். நாம் தினந்தோறும் உண்பதற்கு முன் ப்ராணாயஸ்வாஹா என்ற மந்திரங்களால் அன்னத்தை வாயில் போட்டுக் கொள்ள வேண்டும். இதற்கு ப்ராணாஹுதி என்று பெயர். இந்தப் ப்ராணாஹுதியை பற்களில் படாமல் உண்ண வேண்டும். யாகத்தில் கொஞ்சம் ஹவிஸ்ஸை மாடுகாது போன்று பாத்திரத்தில் வைத்துக் கொடுப்பதற்கு ப்ராசித்ரம் என்ற பெயர். ஒரு சமயம், தேவர்கள் யாசுத்தி ப்ராசித்ரம் என்று இந்த பாகத்தை பூஷா என்ற தேவனுக்கு அளித்தனர். அதை உண்ணும்பொழுது, அவர் பற்களில் பட்டது. அதனால், அவருக்கு எல்லா பற்களும் போய்விட்டது. அதனால்தான் இந்த ப்ராசித்ர பாகத்தை பல்லில் படாமல் உண்ணவேண்டும்.

அதுமுதற்கொண்டு பூஷா என்ற அந்த தேவருக்கு மாவைதான் ஹவிஸ்ஸாக அளித்து வருகின்றனர். பூஷா என்றால் சூரியன் என்று பொருள். சூரியனுக்கும் பல் இல்லாததால் சங்கராந்தி அன்று வழுக்கை தேங்காயைதான் நெய்வேத்யம் செய்வது வழக்கம். பாகவதத்தில் உள்ள தக்ஷயஜ்ஞத்திற்கு இந்த வேதகதைதான் மூலமாகிறது. அங்கும் தக்ஷன், சிவனுக்கு ஹவிஸ் பாகம் கொடுக்காமல் யாகம் செய்தான். அந்த யாகத்தை வீரபத்ரரைக் கொண்டு சிவன் அழித்தார். தக்ஷனுக்கு வேண்டியவனான பூஷா என்ற தேவனும் சிவனை தூஷணை செய்து பல்லைக்காட்டி நகை ஆடினான். கோபமடைந்த வீரபத்திரன் பூஷாவின் பற்களைத் தட்டினார் என்று தக்ஷயஜ்ஞத்தில் உள்ளது. ஆதலால், தக்ஷயஜ்ஞத்திற்கு இதுவே மூலம் என்று நமக்கு நன்கு புலனாகிறது.

அறிவிப்பு

''மதுரமுரளி'' மாத இதழுக்கு சந்தாதாரராக விரும்புபவர்கள் தொடர்பு கொள்ள வேண்டிய முகவரி :

''மதுரமுரளி'', ப்ரேமிகபவனம், New No. 2, Old. 24, நேதாஜி நகர், ஜாபர்கான் பேட்டை, சென்னை - 83.

சந்தா விவரம் : ஆண்டு சந்தா ரூ. 60/-, ஆயுள் சந்தா ரூ. 750/- தனி ப்ரதி ரூ. 5/-

# எந்தரோ மஹானுபாவுலு - 56

மஹாப்ரபு கௌராங்கரை அவரது அந்தரங்க பக்தர்கள் பகவானாகவே **பா**வித்தனர். ஆனால், அவரை உலகத்தில் மற்றவர்கள் பெரிய பண்டிதனாகவும், வைஷ்ணவனாகவும், வித்வானாகவும், ஒரு கம்பீர புருஷராகவும் பார்த்தனர். நற்குணங்களுக்கு இருப்பிடமாக அவர் திகழ்ந்தார். எந்த சாஸ்திர மரியாதையும் அவர் மீறினது கிடையாது. ஸர்வ ஸமர்த்தராக இருந்தபோதும் அனைத்து லௌகீக வைதிக கர்மங்களை விடாமல் அவர் செய்து வந்தார். மற்றவர்களைச் செய்யுமாறும் ஊக்குவித்தார். கலிகாலத்திற்கு நாமஸங்கீர்த்தனம்தான் ஏற்றது, மற்ற கர்மங்கள் எல்லாம் அதற்கு கீழ்ப்பட்டதுதான் என்று அவர் சொல்லி வந்தாலும் க்ருஹஸ்தாச்ரமத்தில் கடைப்பிடிக்க வேண்டிய நித்யானுஷ்டானங்கள், தர்ப்பணம், ச்ராத்தம், உத்ஸவங்கள், தீர்த்த யாத்திரைகள் எவற்றையும் அவர் கண்டனம் செய்யவில்லை. அவரும் அவற்றை விட்டுவிடவுமில்லை.

**பா**வ ஆவேசம் வந்த சமயத்தைத் தவிர மற்ற சமயங்களில் எல்லாம் ப்ரபு தனது மேன்மையை ஒருவரிடமும் தெரிவித்துக் கொள்ளாமல் வினயத்துடன்தான் பழகுவார். தன்னைவிட வயது முதிர்ந்த பக்தர்களிடம் வணக்கத்தை தெரிவித்துக்கொள்வார். மஹாப்ரபுவின் கீர்த்தி பெருகப்பெருக பொறாமையினால் அவருக்கு சில எதிரிகளும் கிளம்பினர். சிலர், அவரைப்போலி என்றனர். நிந்தனை செய்தனர். ப்ரபு சிரித்துக்கொண்டே அதைப் பொருட்படுத்தாமல் இருப்பார். நிந்தனை செய்பவர்களை விரோதித்துக் கொள்ளமாட்டார். மாறாக அவர்களைப் பற்றி புகழ்ந்து பேசுவார். ப்ரபுவின் நாமஸங்கீர்த்தனத்திற்கு அந்தரங்க பக்தர்களுக்குத்தான் அனுமதி உண்டு. ஸ்ரீவாஸ்பண்டிதர் வீட்டின் கதவுகளை மூடியபிறகுதான் நாமஸங்கீர்த்தனம் நடைபெறும். வேடிக்கை பார்க்க வந்து மூடிய கதவுகளைக் கண்டு கோபத்துடன் சிலர் நாமஸங்கீர்த்தனத்தை நிந்தை செய்துகொண்டே செல்வார்கள். இப்படிப்பட்ட ஜனங்களில் கோபால்சாபால் என்ற ஒரு ப்ராஹ்மணன் இருந்தான். அவனுக்கு ப்ரபுவின் வளர்ந்து வரும் புகழைக் கண்டு பொறாமை ஏற்பட்டது.

ஒருநாள், அவன் இரவில் ஸ்ரீவாஸ்பண்டிதர் வீட்டுக்கு வந்தான். அப்போது கதவு மூடியிருந்தது. உள்ளே நாம ஸங்கீர்த்தனம் நடைபெற்றுக்கொண்டிருந்தது.

கோபால்சாபால், அந்த வீட்டு வாசலில், சண்டிபூஜைக்கு வேண்டிய பொருள்களை வைத்தான். ஒரு எலும்பில் சிவப்பு, மஞ்சள், கறுப்பு புள்ளிகளை வைத்து அங்கு வைத்துவிட்டு, கள் நிறைந்த ஒரு பாத்திரமும் மாமிசம் நிறைந்த ஒரு பாத்திரமும் அதற்கு அருகில் வைத்தான். பிறகு அங்கிருந்து சென்றுவிட்டான்.

மறுநாள் காலை நாமஸங்கீர்த்தனம் செய்துவிட்டு அவர்கள் வெளியே வரும்போது, சாபால் தன் குழுவுடன் வெளியே காத்துக் கொண்டிருந்தான். ஒருவர் மற்றொருவருடன், ‘‘எங்களுக்கு முன்பே தெரியும். கதவை மூடிக்கொண்டு பெண்களுடன் சேர்ந்து ஹரிநாம த்வனி செய்கிறார்கள். ஆனால், உள்ளே வாம மார்க பத்ததியில் பைரவி பூஜைதான் செய்கிறார்கள். இதோ அதற்குரிய சாமான்களும் வெளியே இருக்கின்றனவே’’ என்று பேசிக்கொண்டனர். நல்லவர்களுக்கு எல்லாம் இது பொறாமையினால் செய்யப்பட்ட சூது என்று புரிந்தது. ஸ்ரீவாஸ்பண்டிதரும் கைதட்டிக்கொண்டு சிரித்துக்கொண்டே, ‘‘ஆமாம்! நாங்கள் இப்படித்தான் சண்டிபூஜை செய்தோம்’’ என்று கூறிக்கொண்டு அந்தப் பொருள்களை எல்லாம் அகற்றி அந்த இடத்தை சாணியால் சுத்தம் செய்து கங்கா ஜலம் தெளித்து பவித்திரப்படுத்தினார்.

அடுத்தநாளே கோபால்சாபாலுக்கு சரீரம் முழுவதும் குஷ்டநோய் ஏற்பட்டது. உடல்முழுவதும் சீழ்பிடித்து ஒழுக ஆரம்பித்தது. புண்களில் ஏற்பட்ட எரிச்சலால் ‘‘ஹாய் ஹாய்’’ என்று அலறிக்கொண்டிருந்தான். நகரத்தைவிட்டு அவனை அனைவரும் வெளியேற்றினர். கங்கைக்கரையில் ஒரு வேப்ப மரத்தடியே படுத்துக் கிடந்தான். ஒருநாள் கங்கைக்கு வந்த ப்ரபுவைப் பார்த்து, ‘‘ப்ரபோ! நான் உங்களுக்கு அபராதம் செய்தேன். என்னை மன்னித்துவிடுங்கள். நீங்கள் ஜகத்தை உத்தாரணம் செய்துகொண்டு இருக்கிறீர்கள். இந்த பாபியையும் உத்தாரணம் செய்ய வேண்டும். உறவினாலும் நீங்கள் எனக்கு மருமகனாக வேண்டும். இந்த தீனமான மாமாவுக்கு க்ருபை செய்து எனது துக்கத்தைப் போக்க வேண்டும்’’ என்று கேட்டுக்கொண்டான். மஹாப்ரபு, ‘‘நான் எனக்கு அபராதம் செய்தவர்களை மன்னித்து விடுவேன். ஆனால், நீங்கள் ஸ்ரீவாஸ் பண்டிதருக்கல்லவா அபராதம் செய்துள்ளீர்கள். எனவே, உங்களை மன்னிக்கும் சாமர்த்தியம் எனக்குக் கிடையாது’’ என்றார். சிலகாலம் கழித்து ப்ரபு ஸன்யாஸம் பெற்று மறுபடி குலியாகிராமம் வந்தபோது மறுபடியும் அவன் ப்ரபுவிடம் வந்து கெஞ்சினான்.

ப்ரபு அவனை ஸ்ரீவாஸ்பண்டிதரிடம் அனுப்ப, ஸ்ரீவாஸ்பண்டிதர், ‘எனக்கு இவனிடம் முன்பும் வெறுப்பு கிடையாது. இப்போதும்

கிடையாது. ப்ரபு இவனை மன்னித்தால் இவன் இப்போதே முக்தன்தான்' என்றார். எல்லோரும் பார்த்துக் கொண்டிருக்கையிலேயே அவனது சரீரத்திலிருந்த ரோகம் ஆச்சர்யமாக மறைந்தது.

இதேபோல் மற்றொரு ப்ராஹ்மணன் நாமஸங்கீர்த்தனம் பார்க்க வந்தபோது கதவு பூட்டியிருப்பதைக் கண்டு நாமகீர்த்தனம் செய்பவர்களைப் பற்றி கன்னாபின்னாவென்று பேசிவிட்டு தன்வீடு சென்றான். அடுத்தநாள் ப்ரபுவை கங்கைக்கரையில் பார்த்துவிட்டு நேரே அவரிடம் சென்று, ''உனக்கு உனது கீர்த்தனத்தில் இவ்வளவு கர்வமா? பத்து இருபது பேர்களை பொம்மைகளாக்கி ஆட்டுவித்துக் கொண்டு இருக்கிறாயா? எல்லோரும் உன்னை பூஜை செய்கிறார்கள் என்று அஹங்காரமா? எந்த ஸம்ஸார சுகத்தினால் உனக்கு மதம் ஏற்பட்டு இப்படி கர்வியாக இருக்கிறாயோ அந்த ஸம்ஸார சுகம் சீக்கிரத்தில் உனக்கு நஷ்டமாகப் போகட்டும்'' என்று சபித்தான். கூட இருந்தவர்கள் ப்ராஹ்மணனை ஆச்சர்யமாகப் பார்த்தனர். சிலருக்கு கட்டுக்கடங்காமல் கோபம் ஏற்பட்டது. ஆனால், ப்ரபு அனைவரையும் அடக்கிவிட்டு, சிரித்துக்கொண்டே அந்த ப்ராஹ்மணனிடம், ''விப்ர ச்ரேஷ்டரே நான் உங்கள் சரணங்களில் விழுந்து நமஸ்கரிக்கிறேன்! உங்களது சாபத்தை சந்தோஷத்துடன் ஏற்றுக் கொள்கிறேன்'' என்றார்.

சிறிது நேரங்கழித்து அந்த ப்ராஹ்மணனுக்கு கோபம் தணிந்தது. ப்ரபுவிடம் தான் இப்படிப் பேசியதை நினைத்து வெட்கப்பட்டு வருந்தினார். ப்ரபுவிடம் வந்து ''ஹே ப்ரபோ! கோபத்தினால் நான் அறிவு தடுமாறி உங்களிடம் தகாத வார்த்தைகளைப் பேசிவிட்டேன். என்னை தயவுசெய்து மன்னித்து விடுங்கள்'' என்றார்.

ப்ரபு அவரிடம், ''விப்ர ச்ரேஷ்டரே! நீங்கள் எனக்கு ஒரு அபசாரமும் செய்யவில்லை. எனக்கு நீங்கள் கொடுத்த சாபம் பெரிய வரதானம் அல்லவா? ஸ்ரீ க்ருஷ்ணப்ராப்திக்கு ஸம்ஸார ஸுகங்கள் தடைதானே! அவற்றிலிருந்து விடுபடத்தானே நீங்கள் எனக்கு வரதானம் அளித்துள்ளீர்கள்! இதனால் எனக்கு நன்மையும் மங்களமும்தான் ஏற்படும்'' என்று கூறி அந்த ப்ராஹ்மணரை ஆலிங்கனம் செய்துகொண்டார். த்வேஷிப்பவர்களிடமும் சுத்தப்ரேமையை காட்டுவது என்ற இப்படிப்பட்ட செயல்களை மஹாப்ரபுவைப்போன்ற மஹாபுருஷர்களால்தான் செய்யமுடியும்.

(தொடரும்)

- ஜயந்தி ஜானகிராமன்

# ஸனாதனப் புதிர் - பகுதி - 21

தொகுப்பு : **''ஆத்ரேயன்''**, சென்னை.

கைகேயியை விவாகம் செய்துகொண்டபொழுது, தசரதர் அயோத்தி ஸாம்ராஜ்யத்தை, ராஜா அஸ்வபதிக்கு கொடுப்பதாக (அதாவது கைகேயிக்குப் பிறக்கும் குழந்தைக்கு அயோத்தியைத் தருவதாக) வாக்குறுதி அளிக்கிறார். அயோத்தியா காண்டம் (107 - 3). தசரதர் ராமனுக்கு யுவராஜ்யாபிஷேகம் என்று தெரிவித்த பொழுது எல்லா அரசர்களும் (ராஜா ஜனகர், கேகேய நாட்டு அரசனான அஸ்வபதி, யுதாஜித் தவிர) ராஜ சபையில் இருந்தார்கள். ஆனால், ஜனக மஹாராஜாவிற்கும், கேகேய தேசத்து அரசர்களுக்கும் அழைப்பு அனுப்பவில்லை. (அயோத்யா காண்டம், ஸர்க்கம் 1 - 48) அரச சபை முடிந்தபிறகு, மந்திரிகளுடன் ஆலோசனை செய்து, மறுநாள் சித்திரை மாத புஷ்ய நக்ஷத்திரம் அன்று ராமனுக்கு யுவராஜ்யாபிஷேகம் செய்யத் தீர்மானித்து சுமந்திரரை அனுப்பி ராமரை மீண்டும் தசரதர் அழைத்துவரச் செய்கிறார். ராமர் வந்தவுடன் 'பரதன் அயோத்தியில் இல்லாதபொழுதுதான் யுவராஜ்யாபிஷேகம் செய்ய வேண்டும் - மனிதர்களின் மனது உறுதியானதும் நிலையானதும் இல்லை. ஆகவே நாளை காலை யுவராஜ்யாபிஷேகத்திற்குத் தயாராக இருக்கவும்' என்று சொல்கிறார். (அயோத்தியா காண்டம் சர்க்கம் - 4, 25, 26 - 27) பரத சத்ருக்னர்கள் கேகேய தேசம் சென்று 12 வருடங்கள் ஆகவிட்டன. திருமணத்திற்குப் பிறகு சென்ற பரத சத்ருக்னர்களை தசரதன் ராமரது யுவராஜ்யாபிஷேகத்திற்கு அழைக்கவில்லை. அதற்கு மாறாக பரதன் அயோத்தியில் இல்லாத பொழுதுதான் யுவராஜ்யாபிஷேகம் நடக்க வேண்டும் என்று தீர்மானம் செய்கிறார்.

மேற்கூறிய விஷயங்கள் வால்மீகி ராமாயணம் அயோத்தியா காண்டத்தில் காணப்படுகின்றன. இதைக் கருத்தில் கொண்டு கீழ்வரும் வினாக்களுக்கு விடைகள் அளிக்கவும்.

1. கேகேயராஜனுக்கும், ஜனகருக்கும் ஏன் அழைப்பு அனுப்பப்படவில்லை?

2. கைகேயிக்குத்தான் அயோத்தி, என்று அஸ்வபதிக்கு வாக்குக் கொடுத்த விவரம், ராமருக்கு எப்பொழுது தெரிவிக்கப்பட்டது?

3. அப்படி வாக்குறுதி இருக்கையில் ராமர் ஏன் யுவராஜ்ய பட்டாபிஷேகத்திற்கு ஒப்புக்கொண்டார்?

4. அயோத்தி கைகேயிக்குத்தான் என்ற தசரதரது வாக்குறுதி யார்யாருக்குத் தெரியும்? முக்யமாகக் கைகேயிக்குத் தெரியுமா?

5. ஸத்யம் தவறாத தசரதர் கேகேய மன்னனுக்கு கொடுத்த வாக்குறுதியை ஏன் நிறைவேற்றவில்லை?

6. பரதன் அயோத்தியில் இல்லாதபொழுதுதான் யுவராஜ்யாபிஷேகம் நடக்க வேண்டும் என்று தசரதர் ஏன் சொன்னார்?

7. ராமருக்கு இந்த விஷயங்கள் தெரிந்தும், தசரதரது வேண்டுகோளுக்கு ஏன் இணங்கினார்?

8. ராஜா அஸ்வபதிக்கு கொடுத்த வாக்குறுதி என்னவாயிற்று?

9. மேற்கூறிய விஷயங்கள் இப்படி இருக்கும்பொழுது காட்டுக்குச் செல்ல விடைபெற வந்த ராமனிடம் தசரதர், ‘‘கைகேயிக்குக் கொடுத்த இரண்டு வரங்களால் ராஜ்யம் உனக்குக் கிடைக்கவில்லை. மேலும் அவளால் நான் ஏமாற்றப்பட்டேன்’’ என்று கூறியபொழுது ராமர் கேகேய மன்னருக்குக் கொடுத்த வாக்குறுதியைப் பற்றி ஏன் ஒன்றும் கூறவில்லை?

10. கேகேய மன்னருக்குக் கொடுத்த வாக்குறுதி த்ரிகால ஞானியான வசிஷ்டர் கூடவே இருக்கும் சுமந்திரர் போன்றவர்களுக்குத் தெரியுமா?

11. தசரதர் கைகேயியின் மேல் மோகம்கொண்டு அயோத்தியை அவளுக்கு அர்ப்பணித்தபிறகு, ராமருக்கு யுவராஜ்யாபிஷேகம் என்பது சரியா?

12. அயோத்தி மாநகரம் கைகேயிக்குச் சொந்தமாக கொடுக்கப்பட்டது என்று ஏன் மன்னர் தசரதன் ராஜ்யசபையில் அறிவிக்கவில்லை.

13. ஏன் பரதன் அயோத்தியில் இல்லாதபொழுது யுவராஜ்யாபிஷேகம் நடைபெற வேண்டும் என்று ராமர் கேட்டாரா?

அயோத்யா காண்டத்தைப்புரட்டி சரியான விடைகளை அளிக்கவும்.

## ஸனாதனப்புதிர் - பகுதி - 20 - விடைகள்

1. பௌரவி, ரோஹிணி, பத்ரா, மதிரா, ரோசனா, இலா, தேவகி.
2. கீர்த்திமந்தன் என்ற கீர்த்திமான், சுஷேணன், பத்ரசேனன், ருஜு, சம்மர்தன், பத்ரன், பலராமர் (தேவகி கர்பத்தில் இருந்து ரோஹிணி கர்பத்திற்கு மாற்றப்பட்டார்) கிருஷ்ணன், சுபத்ரா.
3. கிருதவர்மாவின் புதல்வனான பலி
4. சாந்தா, ரிச்யச்ருங்க முனிவர்
5. 32 அனுவாகங்கள், 132 பஞ்சாசத், 132 நமஸ்காரங்கள், 32 குறைந்தபட்ச நமஸ்காரங்கள்.
6. பிறந்த ஆண்டு 8-9-1887
   மஹாசமாதி ஆண்டு 14-7-1963
   ஆஸ்ரமம் ஆரம்பித்த ஆண்டு 1932
7. ஸுகேது என்ற யக்ஷன், ஸுந்தன், மாரீசன் - அகஸ்த்திய முனிவர்
8. 32 அனுவாகங்கள் கொண்ட ஸூர்ய நமஸ்காரத்தை
9. மாரீசன் மேல்-மானவம் என்ற பாணம் - சமுத்திரத்தில் நூறு யோஜனை தூரத்திற்குத் தள்ளப்பட்டான்.
   சுபாஹு ஆக்னேய அஸ்த்ரம்-மார்பில் அடிபட்டு இறந்தான்.
10. விரோசனனுடைய பெண் - மந்தரை — இந்திரன்
    சுக்ரன் தாய், ப்ருகுவின் மனைவி — விஷ்ணு
    தாடகை — இராமர்
11. சாந்தா, ரிச்யச்ருங்கர்

---

### ஸனாதனப் புதிர் - பகுதி - 20க்கான சரியான பதில்களை அனுப்பி பரிசு பெற்றவர்கள் விவரம்

முதல் பரிசு ரூ. 250/-

1. G. Padma, B-43, Kavitha Flats, SBI Staff Colony, III Street, Chennai - 106.
2. R. Jayasankari, 175/3, Chithirai Street, Virugambakkam, Chennai - 92.

இரண்டாம் பரிசு ரூ. 150/-

1. C. Krishnaswami, 23 (32), Jambulinga Naicka Street, Chennai - 34.
2. K.S. Subramanyan, 16/4, Dr. Ranga Road, Mylapore, Chennai - 600 004.

மூன்றாம் பரிசு ரூ. 100/- (தலா ரூ. 50/-)

1. Karpagam Krishnan, A2, Paras Shanthi Colony, 11, Jeevarathinam Nagar, Adyar, Chennai - 20.
2. C. Prakash, Sandeepani Gurukulam, Madhurapuri Ashram, Padappi.

# கடவுளுக்கு ஒரு கடிதம்

இறைவா! உலகத்தைச் சற்று கண்திறந்து பார்த்தேன். எத்தனையோ உயிரினங்கள் பலவிதமான துன்பத்திற்கு ஆளாவதைப் பார்க்கின்றேன். புழு, பூச்சியிலிருந்து ஆரம்பித்து எல்லாவிதமான உயிரினங்களும் துன்பப்படுவதைப் பார்க்கின்றேன். பறவைகளைப் பிடித்துக் கூண்டில் அடைக்கின்றார்கள். பல பறவைகளையும், கோழிகளையும், ஆடுகளையும் மாமிசத்திற்காகப் பலவிதத்திலும் துன்பப்படுத்தி அவற்றைக் கொன்று உண்கின்றார்கள். சர்க்கஸ், மிருகக்காட்சிசாலை போன்றவைகளில் பல மிருகங்கள் கூண்டில் அடைக்கப்பட்டு, பலவிதமான துன்பங்களுக்கு ஆளாகின்றன.

குதிரை, ஒட்டகம், மாடுகள் இவற்றையெல்லாம் வண்டிகளில் கட்டி மக்கள் பலவிதத்திலும் துன்புறுத்துகின்றார்கள். இவற்றை எல்லாம் பார்க்கும்பொழுது இவையெல்லாம் எவ்வளவு கொடுமை என்று மனது வருத்தப்படும். அதே நேரத்தில், ஒருகால் நானும் இந்தப் பிறவிகளெல்லாம் எடுத்து இத்தகைய வேதனைகளை எல்லாம் அனுபவித்திருப்பேனா, அல்லது இனி இதுபோல் பிறவி எடுத்து அனுபவிக்கப் போகின்றேனா என்ற கேள்வி என்னுள் எழும்.

பகவான் ரமணர் குழந்தையாக- பாலரமணராக-திருவண்ணாமலை மீது இருந்தாராம். அப்பொழுது ஒரு பாட்டி சாதுநெறியை மேற்கொண்டு அங்குள்ள அடியார்களுக்கெல்லாம் கீரை சமைத்துக்கொடுப்பாராம். கீரை சத்தான உணவு அல்லவா? அங்குள்ள அடியார்கட்கெல்லாம் யார் இப்படி சத்தான உணவு கொடுப்பார்கள் என்று அந்தப்பாட்டிக்கு கவலை. அந்தப் பாட்டிதான், குடியாத்தத்தில் பசு மாடாகப் பிறந்து ரமணரிடம் வந்து சேர்ந்திருக்கிறார். பகவான் அந்த மாட்டிற்கு லட்சுமி என்று பெயர் வைத்து அவளிடம் கருணையுடன் இருந்து வருகின்றார்.

மாதவஸ்வாமி என்று பகவான் ரமணரிடம் இருந்த அணுக்கத் தொண்டரே ஒரு வெள்ளை மயிலாக பரோடா ராணியிடம் பிறந்து, பகவான் ரமணரிடம் வந்து சேருகின்றார்.

இவற்றையெல்லாம் படிக்கும்பொழுது நமக்கு வியப்புடன் ஒரு பயமும் ஏற்படுகின்றது. இப்படிப்பட்டவர்களுக்கும் கூட

மறுபிறவி வந்துள்ளது. அதுவும் மாடாகவும் மயிலாகவும் என்றால் நமக்கு என்ன பிறவி வருமோ தெரியவில்லை பெறுதற்கரிய மானிடப்பிறவியைக் கொடுத்துள்ளாய். மானிடப்பிறவி உயர்ந்ததுதான், அதில் சந்தேகம் ஒன்றும் இல்லை. மனிதப்பிறவியிலும் எவ்வளவு பேர் கண்பார்வை இல்லாமல் இருக்கின்றனர்; அங்கம் பூர்த்தி இல்லாமல் இருக்கின்றனர்; தீராத வியாதியுடன் இருக்கின்றனர். அவர்களைப் பார்க்கும் பொழுது, ''அப்பாடா! நமக்கு இதெல்லாம் இல்லை. நாம் எல்லா விதத்திலும் அங்க பூர்ணமாக உள்ளோம். நாம் மனிதப்பிறவியை வீணாக்காமல் எப்பொழுதும் இறை தியானத்திலேயே கழிக்க வேண்டும்'' என்று அப்பொழுது தோன்றுகின்றது. ஆனால், சில நாட்கள், ஏன் சிறிது நேரத்திலேயேகூட மனம் மாறிவிடுகின்றது.

அடுத்ததாக சிலபேர் நாத்திகர்களாகவும், வன்முறையாளர்கள் ஆகவும், குதர்க்கர்களாகவும், தான் நினைப்பதே சரி என்று நினைப்பவர்களாகவும் உள்ளனர். நல்லவேளையாக என்னை அப்படியாகவும் நீ படைக்கவில்லை; நான் பிழைத்தேன். எனக்கு உன்னிடம் பக்தியெல்லாம் இருக்கின்றது. பக்தி இருக்கின்றது என்பதைவிட, உண்மையான பக்தி செய்ய வேண்டும் என்ற ஆசை இருக்கின்றது. உலகத்தில் எல்லோரும் என்னை பக்தன் என்றும், நல்லவன் என்றும், தூய்மையானவன் என்றும் நினைத்துக் கொண்டிருக்கிறார்கள். நான் யாரை வேண்டுமானாலும் ஏமாற்றலாம்; உன்னைக்கூட ஏமாற்றலாம். ஆனால், என் மனசாட்சியை ஏமாற்ற முடியுமா? என்னைக் கண்டால் எனக்கே பிடிக்கவில்லை. அவ்வாறு இருக்க உனக்கு எப்படி என்னைப் பிடிக்கும்?

நான் இனிமேல் என்னுடைய துர்குணங்களையெல்லாம் விட்டுவிட வேண்டும் என்றுதான் நினைக்கின்றேன். பெரிய வீராவேசமாக இனி இப்படியெல்லாம் செய்யக்கூடாது என்று சங்கல்பங்கள் எல்லாம் செய்துகொள்கின்றேன். ஆனால், அவைகள் போன இடம் கூடத் தெரியவில்லை. என்னுடைய மனமானது நான் சொல்வது எதையுமே கேட்பதில்லையே! பிறகு நான் என்ன செய்வது? ஆரம்பத்தில் நல்ல சாதகர்களாக இருந்து இன்று வழிதவறி வெகுதூரம் சென்றுவிட்டவர்களைப் பார்க்கும்பொழுது நாமும் இவர்களைப்போல் ஆகிவிடுவோமோ என்ற பயம் வந்துவிடுகின்றது. நான் இறை தரிசனத்தைப் பெறுவேனா? அத்வைத நிலையை அடைவேனா? மீண்டும் பிறவாமல் இருப்பேனா? இவ்வளவு நாட்கள் நான்

முயற்சிசெய்து முயற்சிசெய்து தெரிந்து கொண்டது என்ன தெரியுமா? இது எதுவும் என் கையில் இல்லை என்பதுதான்.

நீ கருணை உள்ளவன்தானே? முக்தியை அடைவதற்காகத்தானே உலகத்தில் எல்லோரையும் படைத்திருக்கின்றாய்! உனக்கு ஒரு ரகசியம் சொல்கின்றேன் கேள். புதியதாக ஒரு ஜீவனை எடுத்துச் சுத்தப்படுத்தி உன்னிடம் சேர்த்துக்கொள்வது என்றால் நீ உன்வேலையை ஆரம்பத்திலிருந்து செய்து பாடுபடவேண்டும். ஆனால், தெரிந்தோ தெரியாமலோ நான் ஏதோ சிறிது இந்த வழியில் வந்துவிட்டேன். ஆகவே, என்னைச் சுத்திசெய்து பூர்ணத்துவத்தை அடையச்செய்வது என்றால் உன்னுடைய வேலையின் பளு சிறிது குறையுமல்லவா? ஆகவே, புதியதாக ஒருவரை உன்னை அடைவதற்காகத் தேர்ந்தெடுக்காமல், அரைகுறையாக இருக்கக்கூடிய என்னையே சுத்தி செய்து உன்னை அடையச் செய்துவிடு. எனக்கும் சாந்தி ஏற்படும். உனக்கும் இதில் சிரமம் குறையும். என்ன சரிதானே? உன்னுடைய கருணையை பொழிய ஆரம்பித்துவிட்டாயா?

— ஒரு அரைவேக்காடு

## *நடக்க இருக்கும் நிகழ்ச்சிகள்*

ஜனவரி 1-ந் தேதி முதல் 10-ந் தேதி வரை

அத்யயன உத்ஸவம் - சென்னை ப்ரேமிகபவனம்
கீர்த்தனாவளி - மதுரபுரி ஆஸ்ரமம்

ஜனவரி மாதம் 15-ந் தேதி

கன்யாகுமரி மாயம்மா ஸமாஜத்தில் நடைபெறும் நிகழ்ச்சியில் ஸ்ரீ ஸ்வாமிகள் கலந்து கொள்கிறார்கள்.

ஜனவரி மாதம் 15-ந் தேதிவரை

சென்னை ப்ரேமிகபவனத்திலும், மஹாரண்யம் ஸ்ரீ கல்யாண ஸ்ரீநிவாஸபெருமாள் திருக்கோயிலிலும் தனுர்மாத பூஜை நடைபெறுகின்றது. கல்யாண ஸ்ரீநிவாஸ பெருமாள் திருக்கோயிலில் ஒருநாள் பூஜை கட்டளையாக ரூ.150/- செலுத்தி பக்தர்கள் தனுர்மாத பூஜையில் கலந்து கொள்ளலாம்.

# *பாலகர்களுக்கு ஒரு கதை - 61*

மஹாபாரதத்தில் சாந்திபர்வத்தில், பீஷ்மர் தர்மபுத்திரருக்கு பல உபதேசங்கள் செய்கிறார். அப்பொழுது பகைமை, நட்பு ஆகியவற்றைப் பற்றி விளக்கும்பொழுது, ''சூழ்நிலையைப் பொறுத்து பகைவனுடன் நட்பும், நண்பனுடன் விரோதமும்கூட செய்ய நேரிடலாம். அவ்வாறு பகைவனுடன் நட்பு பாராட்ட நேர்ந்தாலும், அவன் உண்மையாகவே பகைமை உணர்வைத் துறந்து நிரந்தர நண்பனாகிவிட்டான் என்று எண்ணிவிடக்கூடாது'' என்று பீஷ்மர் உபதேசிக்கிறார். இதை விளக்குவதற்காக பின்வரும் கதையைச் சொல்கின்றார்.

ஒரு காட்டில், ஆலமரத்தின் மேல் ஒரு காட்டுப்பூனை வசித்து வந்தது. அதே மரத்தின் அடியில் ஒரு சிறிய வளையில் எலி ஒன்று இருந்தது. தனது ப்ரதான எதிரியான பூனையின் நடமாட்டத்தால், எலியால் சுதந்திரமாக தன் வளையிலிருந்து வெளியே வந்து சுற்றித்திரிய முடியவில்லை. ஒருநாள், வேடன் ஒருவன் அந்த மரத்திற்கு அருகில் ஒரு வலையை விரித்து, அதில் சில உணவுப் பொருட்களை வைத்திருந்தான். மறுநாள் காலையில் வந்து வலையில் அகப்பட்ட விலங்குகளை பிடித்துச் செல்வது அவன் வழக்கமாயிருந்தது. உணவுப் பொருளுக்கு ஆசைப்பட்டு, பூனை அந்த வலையில் மாட்டிக்கொண்டது. பூனைக்கு நேர்ந்த கதியைப் பார்த்த எலிக்கு ஒரே கொண்டாட்டம். ''நமது எதிரியான பூனை மாட்டிக்கொண்டது. நாம் இனிமேல் இஷ்டம்போல் சுற்றித் திரியலாம்'' என்ற சந்தோஷத்துடன் எலி தன் வளையைவிட்டு வெளியே வந்தது.

எலி வெளியே வந்ததுதான் தாமதம், ஒருபுறம் கீரிப்பிள்ளையும், மறுபுறம் கோட்டானும் எலியைத் தங்களுக்கு இரையாக்க குறி வைத்துக்கொண்டிருந்தன. நிலைமையை உணர்ந்த எலி, தான் உயிர்பிழைப்பது எப்படி என்று தீவிரமாக சிந்தித்தது. உயிர்பிழைக்க ஒரே வழி தனது எதிரியான பூனையுடன் ஸ்நேஹம் செய்து கொள்வதுதான் என்றுணர்ந்து, பூனையை நோக்கி, ''நாம் இருவரும் பெரும் ஆபத்தில் மாட்டிக்கொண்டுள்ளோம். நீயோ வேடன் விரித்த வலையில் சிக்கிக்கொண்டு விட்டாய். இதிலிருந்து உன்னால் நிச்சயமாக தப்பிக்க முடியாது.

என்னை இந்த கோட்டானும், கீரிப்பிள்ளையும், குறிவைத்துள்ளன. உன் உதவியில்லாமல் நானும் தப்பிக்க முடியாது. எனவே நாம் இருவரும் ஒரு உடன்பாடு செய்து கொள்ளலாம். நான் வலைக்குள் புகுந்து உன் மடியில் படுத்துக்கொள்வேன். நீ என்னை ஒன்றும் செய்யக்கூடாது. நீ எனக்கு துணையாக இருப்பதைப் பார்த்து கீரியும், கோட்டானும் என்னை விட்டுவிடும். நீ செய்த உதவிக்கு பதிலாக நான் வலையைக் கடித்து, உன்னை விடுவித்து விடுவேன். நீயும் வேடனிடமிருந்து தப்பித்துக்கொள்ளலாம்'' என்று தன் யோசனையைக் கூறியது. வலையிலிருந்து தப்பிக்க வேறு வழியில்லை என்று அறிந்திருந்த பூனையும் உடனே ஒப்புக்கொண்டது.

மறுகணமே, எலி ஓடிச்சென்று பூனையின் மடியில் ஏறி படுத்துக்கொண்டது. சிறிது நேரம் காத்திருந்து பார்த்துவிட்டு, கோட்டானும், கீரியும் வேறிடத்தில் இரைதேடச் சென்றுவிட்டன. தனக்கு நேர்ந்த ஆபத்து விலகிவிட்டதைக் கண்ட எலி, வலையிலிருந்து வெளியே வந்தது. பூனைக்கு வாக்களித்தபடியே எலி வலையைக் கடிக்கத் தொடங்கியது. ஆனால், மிகவும் நிதானமாக எலி செயல்பட்டுக்கொண்டிருப்பதைக் கண்ட பூனை கோபமாக எலியிடம், ''நீ ஆபத்திலிருந்தபோது உன்னைக் காப்பாற்றினால் என்னை விடுவிப்பதாக வாக்களித்தாயே! ஆனால், இப்பொழுது இவ்வளவு மெதுவாக நீ வலையைக் கடித்தால், வேடன் வந்து என்னைப் பிடித்துச் சென்றுவிடுவான்'' என்று கூறியது.

அதற்கு அறிவுகூர்மை மிக்க அந்த எலி, ''நீ கூறுவதுபோலவே நான் விரைவாக செயல்பட்டு உன்னை விடுவித்தால், வெளியே வந்தவுடன் நீ என்னையே விழுங்கிவிடுவாய். ஆனால், நான் கொடுத்த வாக்குறுதியை நிச்சயமாக காப்பாற்றுவேன். காலையில் வேடன் வரும்பொழுது, நான் விரைவாகக் கடித்து, உன்னை விடுவிப்பேன். அப்பொழுது வேடன் அருகில் இருப்பதால் நீயும் பிழைத்தால் போதும் என்று ஓடிவிடுவாய். நானும் தப்பித்துக் கொள்வேன்'' என்று பதிலுரைத்தது. தான் கூறியவாறே, காலையில் வேட்டை நாய்களுடன் வேடன் வருவதைக் கண்டவுடன், எலி எஞ்சியிருந்த வலையைக் கடித்து, பூனையை விடுவித்தது. பூனையும் தப்பித்து ஓடிவிட்டது. புத்தி சாதுர்யத்துடன் செயல்பட்ட எலியும் உயிர் பிழைத்துக்கொண்டது.

# மாலே மணிவண்ணா - 4

''இன்னையென்று சொல்லலாவது இல்லை'' (13)

என்பர் திருமழிசைப்பிரான். இதையே 'நின்னை, இன்னன் என்று உரைத்தல் எமக்கு எவன் எளிது' என்கிறது பரிபாடல். (1 : 31 - 32)

பரிபாடலின் முதற்பாடலில் பரம்பொருளின் தத்துவ நிலையும், உயிர்களோடு உடனாய் இருந்து இயக்குகிற நிலையும், உயிர்களுக்கு அருளும் சீலமும், அவதார சௌலப்பியமும் என்று அனைத்தும் பேசப்படுகின்றன.

வேதம், விஷ்ணுஸஹஸ்ரநாமம், பகவத்கீதை முதலியனவற்றின் சாராம்சமான செய்திகள் பரிபாடலில் வருகின்றன. பரிபாடல் செய்திகள் ஆழ்வாராதிகளின் பாசுரங்களில் அப்படியே வடித்து எடுக்கப்படுகின்றன.

திருமாலின் பெருமையை விளக்கும் முதற்பாடல் :

அருமறைப் பொருள்

ஆயிரம் விரித்த அணங்குஉடை அருந்தலை
தீஉமிழ் திறலொடு முடிமிசை அணவர
மா உடை மலர்மார்பின், மைஇல் வால்வளைமேனி,
சேய் உயர் பணைமிசை எழில்வேழம் ஏந்திய,
வாய் வாங்கும் வளை நாஞ்சில், ஒரு குழை ஒருவனை;
எரிமலர் சினைஇய கண்ணை; பூவை
விரிமலர் புரையும் மேனியை; மேனித்
திரு ஞெமிர்ந்து அமர்ந்த மார்பினை; மார்பில்
தெரிமணி பிறங்கும் பூணினை; மால்வரை
எரி திரிந்தன்ன பொன்புனை உடுக்கையை-
சேவல் அம் கொடியோய்! நின் வலவயின் நிறுத்தும்
ஏவல் உழந்தமை கூறும்,
நாவல் அந்தணர் அருமறைப் பொருளே.

(1 - 5 பலராமன், 6 - 10 கண்ணன்)

(14 - 28 வரை உள்ள வரிகள் சிதைந்துபோய் உள்ளன)

அருளல் வேண்டும்

‘பொருவேம்’ என்றவர் மதம் தபக் கடந்து
செருமேம் பட்ட செயிர்தீர் அண்ணல்!

இருவர் தாதை! இலங்கு பூண் மாஅல்
தெருள நின் வரவு அறிதல்
மருள் அறு தேர்ச்சி முனைவர்க்கும் அரிதே:
அன்ன மரபின் அணையோய்! நின்னை
இன்னன் என்று உரைத்தல் எமக்கு எவன் எளிது?

அருமை நற்கு அறியினும், ஆர்வம் நின்வயின்
பெருமையின் வல்லா யாம் இவண் மொழிபவை
மெல்லிய எனாஅ வெறாஅது, அல்லிஅம்
திரு மறு மார்ப! நீ அருளல் வேண்டும்.

தோத்திரங்கள்

விறல் மிகு விழுச்சீர் அந்தணர் காக்கும்

அறனும், ஆர்வலர்க்கு அருளும், நீ:
திறன் இலோர்த் திருத்திய தீது தீர் கொள்கை
மறனும், மாற்றலர்க்கு அணங்கும்; நீ:
அம்கண் வானத்து அணி நிலாத் திகழ்தரும்
திங்களும், தெறுகதிர்க் கனலியும், நீ:

ஐந்தலை உயரிய அணங்கு உடை அருந்திறல்
மைந்துடை ஒருவனும், மடங்கலும், நீ:
நலம் முழுது அளைஇய புகர்அறு காட்சிப்
புலமும், பூவனும், நாற்றமும், நீ:
வலன் உயர் எழிலியும், மாக விசும்பும்

நிலனும் நீடிய இமயமும், நீ.
அதனால்,
'இன்னோர் அனையை; இனையையால்' என
அன்னோர் யாம் இவண் காணாமையின்,
பொன் அணி நேமி வலம் கொண்டு ஏந்திய
மன்னுயிர் முதல்வனை ஆதலின்,
நின்னோர் அனையை, நின் புகழொடும் பொலிந்தே!
நின் ஒக்கும் புகழ் நிழலவை;
பொன்ஒக்கும் உடையவை;
புள்ளின் கொடியவை; புரிவளையினவை;
எள்ளுநர்க் கடந்து அட்ட இகல் நேமியவை;
மண்ணுறு மணியாய் உருவினவை;
எண் இறந்த புகழவை; எழில் மார்பினவை;
ஆங்கு, வேண்டுகோள்
காமரு சுற்றமொடு ஒருங்கு நின் அடியுறை
யாம் இயைந்து ஒன்றுபு வைகலும் பொலிக! என
ஏமுறு நெஞ்சத்தேம் பரவுதும் -
வாய்மொழிப் புலவ! நின்தாள் - நிழல் தொழுதே.

(அணங்கு - வருத்துதல், அணவர - மேல் நோக்கிச் செல்ல, மா - திருமகள், நாஞ்சில் - கலப்பை, பூவை - காயாம்பூ, ஞெமிர்ந்து - பரந்து, சேவல் - கருடச்சேவல், இருவர் - பிரமன், மன்மதன், மடங்கல் - அழித்தல் தொழிலாகிய கூற்று, புகர் - குற்றம், புலம் - வேதம், நாற்றம் - படைப்பு, எழிலி - மேகம், மாகம் - ஆகாயம், விசும்பு - சுவர்க்கம்).

நினைக்கவும், சொல்லவும், வழிபடவும் எல்லையில்லா நலம் அருளும் திருமாலை இம் முதல்பாட்டால் வழிபட்டு மேலே செல்வோம்.

(தொடரும்)

# ப்ருந்தாவனமும் நந்தகுமாரனும் - 12

ப்ருந்தாவனத்திற்கு அருகில் உள்ள நந்தக்ராமத்தைச் சேர்ந்த ஸ்ரீராதாரமணஜிக்கு 1895-ஆம் ஆண்டு ச்யாம்சுந்தர்ஜி என்ற புத்திரன் பிறந்தார். இவர் சிறு வயதிலேயே நன்கு கற்றுணர்ந்த பண்டிதராகத் திகழ்ந்தார். ஸ்வாமி அம்ருதானந்த ஸரஸ்வதி என்பவரிடம் இவர் அத்யயனம் செய்து வ்ரஜத்தில் உள்ள பண்டிதர்களுக்குள் ச்ரேஷ்டராக விளங்கினார். ஸ்ரீமத்பாகவதத்தை நன்கு அத்யயனம் செய்து பெரிய பண்டிதராக இருந்ததால் அக்காலத்து வ்ரஜத்திலுள்ள மஹாத்மாக்கள் கூட அவரிடம் பாகவத ச்ரவணத்திற்காக வந்து சேருவார்கள்.

ஸ்ரீச்யாம்சுந்தர்ஜி மாத்வகௌடீய சம்ப்ரதாயத்தைச் சேர்ந்த ஸ்ரீச்யாம்நந்தன் பரம்பரையில் வந்த ஸ்ரீகோகுல்சந்த்ர கோஸ்வாமியிடம் தீக்ஷை பெற்றுக்கொண்டார். மிகப்பெரிய வித்வானாக இருந்தாலும் ஸ்ரீச்யாம் சுந்தர்ஜி மிகவும் சரளமானவரும் கள்ளம்கபடமற்றவராகவும் இருந்தார். ஏழ்மைநிலையிலுள்ள ப்ராஹ்மணராகவே வாழ்ந்தார். அவரது கள்ளமற்ற ஸ்வபாவத்தினாலேயே ஆரம்ப கால வாழ்க்கையில் அவர் ஒரு சன்யாஸியின் ஆதிக்கத்தினால் கவரப்பட்டு அவர் கூறிய உபாஸனைகளின் பலனாக பலசித்திகளை அடைந்தார். கேள்வி கேட்காமலேயே எதிரிலுள்ளவர்களுக்கு அவர்களது மனத்தில் எழும் கேள்விகளுக்கு பதில் தருவார். தூரதேசத்தில் நடப்பதை கூறுவார். எதிர்காலத்தில் நடக்கவிருப்பதை துல்லியமாக கணித்துக் கூறுவார்.

ஒருநாள் அவரது குருவின் மற்றொரு சிஷ்யரான ஸ்ரீ ஹீராநந்தஜி என்பவர் அவரிடம், ''இப்படிப்பட்ட சித்திகளால் உனக்கு நன்மை விளையாது. உன்னுடைய ஆன்மீக முன்னேற்றம் தடைபெறும்'' என்று எச்சரித்தார்.

அதே சமயம், லலிதாகுண்டத்தைச் சேர்ந்த மற்றொரு மஹாத்மா அவரை ஸ்ரீமத்பாகவதத்தையே ஆராதனை செய்து வருமாறு பணித்தார். அதைக் கேட்டு ஸ்ரீ ச்யாம்சுந்தர்ஜியும் தனது சித்திகளை விட்டொழித்து ஸ்ரீமத் பாகவதத்தையே ஆராதனை

செய்ய முடிவு செய்துகொண்டு தினமும் ஸ்ரீமத் பாகவதத்தை பாராயணம் செய்ய ஆரம்பித்தார்.

ஒருநாள் அவரது கனவில் ஒரு தேவி அவர்முன் தோன்றி ''நான் கர்ணபிசாசினி, நீ பாகவதத்தை விட்டுவிட்டால் நான் உன்னை மிகவும் பெரிய தனவந்தன் ஆக்கிவிடுவேன்'' என்றாள்.

உடனே ச்யாம்சுந்தர்ஜி, ''நான் உன்னை வேண்டுமானாலும் விடுவேன், ஆனால் பாகவதத்தை விடமாட்டேன்'' என்றார். அன்றே அவரைவிட்டு சித்திகள் விலகின. அவர் அப்படிச் சொல்லியிராவிட்டால் அவர் பெரிய பணக்காரராகி இருப்பார். நாடு பூராவும் அவர் புகழ் பரவ பெரிய பெரிய தனிகர்களும், ராஜாக்களும் அவரிடம் வந்து சேர்ந்திருப்பார்கள். ஆனால் அவர் ஸ்ரீமத் பாகவதத்தை ஆராதனம் செய்வது என்று நிச்சயித்துக் கொண்டார். சாஸ்த்ரங்கள் என்ன கூறுகிறது என்றால், ''எந்த க்ஷணத்தில், ஒரு ஸுக்ருதம் செய்த புருஷன் பாகவதத்தை பாராயணம் செய்ய இச்சை கொள்கிறானோ அதே க்ஷணத்தில் பகவான் அவனது ஹ்ருதயத்தில் சிறைகொண்டு விடுவான்.''

எனவே ஸ்ரீ ச்யாம்சுந்தர்ஜியின் ஹ்ருதயத்திலும் பகவான் சிறை கொண்டான். யாருடைய மனதில் பகவான் வந்துவிட்டானோ பிறகு அவனுக்கு ஸம்ஸார சுகபோகங்களுக்கும் ஸம்மானங்களுக்கும் மனதில் இடமேது? தன்னிடமிருந்த சித்திகளை புல்லைப்போல் உதறித்தள்ளி வாழ்நாள் முழுவதும் ஏழையாகவும், ஸம்ஸாரிகளின் கண்களில் படாமல் ஒதுங்கியும், நந்தக்ராமத்திலேயே நிர்விக்னமாக பாராயணம், பஜனை முதலியவற்றை செய்துகொண்டு எளிய வாழ்க்கை வாழ்ந்து வந்தார். தினமும் ப்ரஹ்ம முகூர்த்தத்தில் எழுந்து நாமஜபம் செய்வார். ஸ்னானத்திற்குப் பிறகு ஆஹ்னிகம் முடிந்ததும் ஸ்ரீமத் பாகவத பாராயணம் செய்வார். மத்தியானம் உணவு முடிந்ததும் மறுபடி நாமஜபம் செய்வார். மாலையில் பாகவதம் கற்பிப்பார். இரவில் மறுபடி நாமஜபம் செய்வார்.

வாழ்நாள் முழுவதும் பாகவதம், பகவான், பகவன்நாமம் இவற்றைத் தவிர வேறெதுவும் விரும்பாமல் வாழ்ந்தார்.

1968-ஆம் ஆண்டு கார்த்திகை மாதம் அவர் சிறிது நோய் வாய்பட்டார். தீபாவளி சமயத்திலேயே அவர் உடல் அழிந்துவிடும் என அனைவரும் நினைத்தனர். ஆனால் அவரது இல்லத்தாரிடம் அவர், ''கவலைப்படாதீர்கள் நான் இன்று இறக்கமாட்டேன். நீங்கள் சந்தோஷமாக தீபாவளி கொண்டாடுங்கள். அன்ன கூடோத்ஸவம் கொண்டாடுங்கள்'' என்றார். பஞ்சமியன்று அவர் ''கோபாஷ்டமி என்று வருகிறது'' என்று கேட்டார். அவரிடம் கோபாஷ்டமி என்று வருகிறது என்று சொன்னவுடன் அவர், ''நான் கோபாஷ்டமி முடிந்ததும் நவமி அன்று கிளம்பிச் செல்கிறேன்'' என்று சொன்னார். தான் செல்ல வேண்டிய தினத்தை தானே நிச்சயித்துக்கொண்டார்.

பிறகு ''என்னுடைய அஸ்தியை வ்ரஜத்தை விட்டு வெளியே எங்கும் விஸர்ஜனம் செய்ய வேண்டாம்'' என்றும் கேட்டுக்கொண்டார். பிறகு அவர் நிச்சயித்துக்கொண்டதுபோல் கோபாஷ்டமிக்கு அடுத்த நாளான நவமியில் அவர் ஸ்ரீ க்ருஷ்ணனின் நித்யதாமத்திற்கு கிளம்பிச் சென்றார். அவரது அஸ்தியை நந்தஸரோவரில் விஸர்ஜனம் செய்தார்கள். இப்படி ஸ்ரீமத் பாகவதத்திற்காகவே தன் வாழ்க்கையை வாழ்ந்த மஹாத்மா ஸ்ரீச்யாம்சுந்தர்ஜி.

(தொடரும்)

— ஜயந்தி ஜானகிராமன்

---

**பிழை திருத்தம்**

| இதழ் | பக்கம் | பிழை | திருத்தம் |
|---|---|---|---|
| டிசம்பர் 2002 | 29 | பரிப்ரஸன்னேன | பரிப்ரச்னேன |

# ஸ்ரீ ஸ்வாமிகளின் ஸம்பாஷணைகளிலிருந்து - 88

தீரமிலகத்திற் றேடியுந் தனையான்
திரும்பவுற் றேனரு ளருணாசலா

தீரம் என்றால் எல்லை என்று ஒரு அர்த்தம் உண்டு. அதனால்தான் 'நதிதீரம்' என்று சொல்கிறோம் (நதியின் எல்லை). 'தீரமில்' என்றால் எல்லையே இல்லாத என்று பொருள்படும். எல்லை இல்லாமல் ஒன்று இருக்குமானால், அதற்கு ஆரம்பமும், முடிவும் இருக்கமுடியாது. ப்ரஹ்மஸ்வரூபமான பகவானுக்கு ஆரம்பமும் இல்லை, முடிவுமில்லை.

தீரம் என்றால் பௌருஷம்(வீரம்) என்றும் அர்த்தமுண்டு. தீரனாக இருக்கிறான் என்று சொல்வதுண்டு. 'தீரமில் அகத்தில் தேடியும் உனையான்' - தீரனாய் இருந்தால்தான் இந்த ப்ரஹ்மஸ்வரூபத்தை, ஆத்மவிசாரம் செய்து அகத்தில் தேடி கண்டுபிடிக்க இயலும். ஏனெனில், அநேக மஹாத்மாக்கள் பல தியாகங்களைச் செய்தே இந்த ப்ரஹ்மஸ்வரூபத்தை அடைந்துள்ளனர். தியாகம் செய்யாதவர்களுக்கு ஆத்மஸ்வரூபம் கிடைத்ததில்லை. மஹாத்மாக்கள் பூரண விவேக, வைராக்கியத்துடன் தியாக மனப்பான்மையுடன், தீரர்களாய் கடுமையான சாதனைகளை புரிந்து ப்ரஹ்மஸ்வரூபத்தை அடைந்துள்ளனர். தீரம் இல்லாவிடில் எப்படி உலகை உதறமுடியும்? உலகை உதறுவதற்கு தைரியம் தேவை.

உலகில் எந்த விஷயத்திலும் முதலில் ஜாக்கிரதையாகத்தான் இருக்கப் பார்க்கிறோம். உதாரணமாக, எதை தானம் கொடுத்தால் புண்யம் வரும் என்று தெரியுமோ, தெரியாதோ, எள்ளு வாங்கினால் பாபம் வருமென்று நன்றாக நமக்கு தெரிந்துள்ளது. அதனால்தான், நவராத்ரி காலங்களில்கூட யாராவது எள்ளினால் செய்த பக்ஷணம் (தின்பண்டம்) கொடுப்பதாகத் தெரிந்தால், அங்கு செல்லமாட்டார்கள். அதே போல்தான், கங்கையிலோ, காவேரியிலோ ஸ்நானம் செய்தால் மஹத்தான புண்யம் என்று தெரிந்தாலும், கண்மூடித்தனமாக ஆற்றில் நாம் இறங்குவதுஇல்லை. ப்ரவாஹமாக நீர் ஓடும்பொழுது, ஆற்றில்

எவ்வளவு ஆழம், பாசி இருக்கிறதா என்று சோதித்துதானே இறங்குகிறோம்? அதாவது, புண்யம் சம்பாதிப்பதாக இருந்தாலும், முதலில் ஜாக்கிரதைப்படுத்திக் கொண்டுதான் சம்பாதிக்கிறோம். அதுபோல் ஆத்மஞானியானவன் (சாதனை க்ராமத்தில் உள்ளவர்) ப்ரஹ்மஞானத்தை அடைய சாதனை செய்யும் காலத்தில், முதலில் வைராக்கியத்தை சம்பாதித்துக்கொள்ள வேண்டும். எவ்வளவு ஆத்மவிசாரம் செய்தாலும், வைராக்யம் இல்லாவிடில் ஒரு துளியும் பயனில்லை. இந்த ஜகத்தின் (உலகம்) மேல் உள்ள ஆசை போகாவிடில், பார்வை உள்முகப்படாது. 'தீரமில் அகத்தில் தேடியுந்தனையான் திரும்பவுற்றேன்'— ''அருணாசலா, எல்லையே இல்லாத உன்னை, பார்வையை உண்முகமாகத் திருப்பி, ஆத்மவிசாரத்தினால் தேடி, அடைந்துவிட்டேன்'' என்று ரமண மஹரிஷிகள் சொல்வதுபோல் உள்ளது.

ஹ்ருதயத்திலிருக்கும் பரமாத்மா என்றுமுள்ளவர் (நித்யஸித்தமான வஸ்து). அந்த வஸ்துவிற்கு அழிவு கிடையாது. மறைவுதான் உண்டு. ஹ்ருதயத்தில் உள்ள பரமாத்மாவை மறந்துவிட்டதாக நாம் நினைப்பதே ப்ரமை. இந்த ப்ரமையை போக்கிக்கொள்ளுதலே ஞானம். 'திரும்பவுற்றேனருள்' - அந்த எல்லையில்லாத வஸ்துவான உன்னை ஹ்ருதயத்தில் தேடி அடைந்தேன் என்கிறார்.

ஒரு ஆழ்வார் பகவானை பார்த்து பாடும் காலத்தில், ''நீ பெரியவனா, நான் பெரியவனா'' என்று கேட்டு, ''நானே (தானே) பெரியவன்'' என்கிறார். எப்படி என்றால், ''பகவானோ இந்த ஸர்வ ப்ரபஞ்சத்தையே ஸ்ருஷ்டித்து, அதைக் காப்பாற்றி, அவசியப்பட்டால் ஸம்ஹாரம் செய்யக்கூடியவன். அப்பேர்ப்பட்ட பகவானை நான், எனது ஹ்ருதயத்திற்குள் அடக்கிவிட்டதால், நானே பெரியவன் என்கிறார் ஆழ்வார். அதுபோலவே, இங்கும் எல்லையில்லாத வஸ்துவை, தான் தேடி கண்டுபிடித்துவிட்டதாக ரமண மஹரிஷிகள் சொல்கிறார்.

இந்த அக்ஷரமணமாலையில் உள்ள 108 பாட்டுகளும் ப்ரார்த்தனை ரூபமாகவே அமைந்துள்ளது. ''ஞானமில்லாதுன் ஆசையாற் தளர்வற ஞானம் தெரித்தருள்'', 'கோபமில் குணத்தோய் குறியாய் எனக்கொள குறையென் செய்தேன்'' - என்று பல

பாடல்களில் எனக்கு பக்குவத்தைக் கொடு, காட்சியை (பகவத் அனுபவம்) கொடு, தீக்ஷை கொடு, ஞானம் கொடு என்று ப்ரார்த்தித்துக்கொண்டு வந்து, இங்கு நான் அடைந்துவிட்டேன் என்று சொல்வது பொருந்தவில்லை. ஒன்றை தெரிந்துகொண்டதாக சொல்வதும், மற்றொன்றை கேட்பதாக (ப்ரார்த்திப்பதாக அர்த்தம் கொள்வதும் சரியாக இராது. ஆக, 108 பாட்டுகளுக்கும் ப்ரார்த்தனை ரூபமாகவே அர்த்தம் கொள்வதுதான் சரியாக இருக்கும்.

(தொடரும்)

# ஸ்ரீ துக்காராம் ஸ்வாமிகளின் அபங்கம்

நீசபண பரவே தேவா -
  ந சலே கோணாசாஹீ தாவா
மஹாபுரே ஜாடே ஜாதீ -
  தேதே லவ்ஹாளே ராஹாதீ
யேதா ஸிந்தூச்யா லஹரீ -
  நம்ர ஹோதா ஜாதீ வரீ
துகா ம்ஹணே கள -
  பாய தரல்யா நசலே பள

''பாண்டுரங்கா! எப்பொழுதும் எளியவனாக இருப்பது நன்று. ஏனென்றால், எளியவனாக இருந்துவிட்டால், வலியவர்கள் வம்பு செய்ய மாட்டார்கள். வெள்ளம் வரும்பொழுது, பெரிய மரங்கள் மட்டும் தான் அடித்துச் செல்லப்படுகின்றன; சிறிய நாணல் தப்பிவிடுகின்றது. அதேபோல், கடலில் பெரிய அலைகள் வரும்பொழுது, நாம் குனிந்து கொண்டால் அவை நம்மைத் தாண்டிச் சென்றுவிடுகின்றன. பெரியவர்களின் சரணங்களை நாம் பற்றிக் கொண்டால் நமக்கு அவர்களால் துன்பமில்லை. இதுவே எளிமையாக இருப்பதன் ரகசியம்.'' என்கிறார் ஸ்ரீ துக்காரம் ஸ்வாமிகள்.

# செய்திகள்

நவம்பர் 29-ந் தேதி - ஏகாதசி

வண்டலூர் அருகிலுள்ள கொளத்தூர் கிராமம் ஶ்ரீ ராகவாஸ்ரமத்தில் நம் ஸத்ஸங்கத்தினரால், அகண்ட ''ஹரே ராம...'' நாமகீர்த்தனம் நடைபெற்றது.

டிசம்பர் 4-ந் தேதி - கார்த்திகை அமாவாசை

திருவிசநல்லூர் ஶ்ரீ ஶ்ரீதர அய்யாவாள் கங்காகர்ஷணத்தை ஒட்டி சென்னை ப்ரேமிகபவனத்தில், அன்னதானம் செய்யப்பட்டது. திவ்யநாமகீர்த்தனம் நடைபெற்றது.

டிசம்பர் 15-ந் தேதி

வைகுண்ட ஏகாதசியை ஒட்டி மதுரபுரி ஆஸ்ரமத்திலும், ப்ரேமிகபவனத்திலும் அகண்டநாமகீர்த்தனம் நடைபெற்றது.

சிதம்பரம், சிவசக்தி நகர், ஶ்ரீ V. ஶ்ரீநிவாஸன், திருமதி ராஜலக்ஷ்மி ஶ்ரீநிவாஸன் அவர்கள் இல்லத்தில் சைதன்ய மஹாப்ரபு நாமபிக்ஷாகேந்த்ரா சார்பில் அகண்ட ''ஹரே ராம'' நாமஸங்கீர்த்தனம் நடைபெற்றது.

டிசம்பர் 16-ந் தேதி முதல்

மஹாரண்யம் ஶ்ரீகல்யாண ஶ்ரீநிவாஸபெருமாள் திருக்கோயிலிலும், சென்னை ப்ரேமிகபவனத்திலும் தனுர்மாதபூஜை நடைபெற்றுக்கொண்டு வருகிறது.

டிசம்பர் 22ந் தேதி

கடலூர், காவேரி கல்யாண மண்டபத்தில், ''அருள் சுரக்கும் அழகன் கை'' என்னும் இசை கேசட் வெளியீட்டு விழாவில், ஶ்ரீ ஸ்வாமிகள் கலந்து கொண்டு கேசட்டை வெளியிட்டு உரை நிகழ்த்தினார்கள்.

டிசம்பர் 23, 24-ந் தேதிகள்

சென்னை, தி.நகர் தக்ஷிணபாரத ஹிந்தி ப்ரசார சபாவில், க்ஷிப்ரப்ரஸாத கணபதி ட்ரஸ்ட் சார்பில் நடைபெற்ற நிகழ்ச்சிகளில் ஶ்ரீ ஸ்வாமிகள் கலந்துகொண்டார்கள்.

டிசம்பர் 25, 26 தேதிகள்

கல்பாக்கம், புதுப்பட்டினம் DAV நகரியத்தில், ஶ்ரீ ஐயப்பா சேவா சங்கம் சார்பில் ஶ்ரீஸ்வாமிகள் உபந்யாஸம் செய்தார்கள்.

டிசம்பர் 27, 28, 29 தேதிகள்

ஓசூர், ஶ்ரீ தாஸப்பா கல்யாண மஹாலில், ஶ்ரீ ராதாக்ருஷ்ண பஜனை மண்டலி Trust சார்பில் நடைபெற்ற ஶ்ரீ ராதாகல்யாண மஹோத்ஸவத்தில் ஶ்ரீ ஸ்வாமிகள் கலந்துகொண்டு உபன்யாஸம் செய்தார்கள்.

# திவ்யதேச திருப்பணிகள்

நலிவடைந்த திவ்யதேசங்களை (ஆழ்வார்களால் பாடப்பட்ட வைணவ திருத்தலங்களை) திருப்பணி செய்து புதுப்பித்து, அங்கு முறைப்படி நித்யபூஜையும், உத்ஸவங்களும் நடைபெற ஏற்பாடு செய்வது, ஸ்ரீ ஸ்வாமிகளின் முக்கிய குறிக்கோள்களுள் ஒன்று. ஸ்ரீ ஸ்வாமிகளின் நியமனப்படி, சீர்காழி அருகிலுள்ள திருநாங்கூரில், மிகவும் சிதிலமடைந்த நிலையில், ஒருவேளை பூஜைகூட சரிவர நடைபெறாமலிருந்த திருஅரிமேயவிண்ணகரம், திருத்தெற்றியம்பலம், செம்பொன்செய்கோவில், திருக்காவளம்பாடி, கோலவில்லிராமர் கோவில், திருமணிக்கூடம் ஆகிய 6 திவ்யதேசங்களுக்கு ஏற்கனவே திருப்பணி செய்யப்பட்டு, நித்ய பூஜைகளும், உத்ஸவங்களும் முறைப்படி நடந்து வருகின்றன. அத்துடன் நின்றுவிடாமல், கோயிலை சுத்தப்படுத்துதல், ஒட்டடையடித்தல், உழவாரப் பணி செய்தல், நந்தவனம் அமைத்தல் ஆகிய பணிகளும் நடைபெற்று வருகின்றன.

மேலும், வரும் காலங்களில் திவ்யதேசங்களில் ஆகமவிதிப்படி பூஜை நடைபெற, பட்டாச்சாரியார்களை தயார் செய்யும் நோக்கத்துடன் திருநாங்கூரிலேயே, ''ஸ்ரீ முரளீதர ஸ்வாமிகள் வைணவ ஆகமவேதபாடசாலை'' துவக்கப்பட்டு, தற்சமயம் 33 வித்யார்த்திகள் வைணவ ஆகமம், திவ்யப்ரபந்தம் மற்றும் வேதம் பயின்று வருகின்றார்கள். திவ்யதேச திருப்பணியின் தொடர்ச்சியாக, தற்பொழுது கீழச்சாலை ஸ்ரீ மாதவபெருமாள் திருக்கோயில் எடுத்துக் கொள்ளப்பட்டுள்ளது. ஸ்ரீ ஸ்வாமிகளின் ஆக்ஞைப்படி ஸ்ரீ G.K. ராமமூர்த்தி அவர்களின் உதவியுடன், ''கூடலூர் நற்பணி மன்றம்'' இந்த திருப்பணியை ஏகதேசமாக ஏற்றுச் செய்து வருகின்றது.

இது ஒரு கருங்கல் திருப்பணி என்பது குறிப்பிடத்தக்கது. இந்த திருக்கோயில் மிகவும் சிதிலமடைந்து, விமானம் ஒருபுறமாக சாய்ந்து மிகவும் ஆபத்தான நிலையில் இருந்தது. 29-8-2002 அன்று தாயார் சன்னதி பாலாலய ஸ்தாபனம் செய்யப்பட்டு, திருப்பணி வேலைகள் நிறைவுபெறும் நிலையில் உள்ளன. 9-11-2002 அன்று, ஸ்வாமி கர்ப்பக்ரஹத்திலிருந்து வெளியே கொண்டுவரப்பட்டு தனியாக பாலாலய ஸ்தாபனம் செய்யப்பட்டு, தற்சமயம் புதிதாக கர்ப்பக்ரஹம் நிர்மாணிக்கப்பட்டு வருகின்றது. ஸ்வாமி சன்னதி திருப்பணி தற்பொழுது முழுவீச்சில் நடந்து வருகின்றது. ஜனவரி 2003 முதல் ராஜ கோபுர பணிகளும் துவங்கப்பட உள்ளன.

மங்களானி பவந்து